DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022 |
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | ரஜினி.T |
| Father's Name | : | N.தீர்த்தகிரி |
| Village | : | வீரகனூர் |
| Taluk | : | |
| District | : | சேலம் |
| Profession | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 20th day of March 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது சேலம் மாவட்டம், வீரகனூர் வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.08.2020 அன்று குருபரப்பள்ளி வட்டக் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு.சரவணன், துணை காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி உட்கோட்டம் அவர்கள் வாய்மொழி உத்தரவின் பெயரில் இவ்வழக்கில் இறந்து போன செல்வன் வெங்கடேசன் என்பவரின் பிரேதத்தின் மீது கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு வைத்து பகல் 12.30 மணி முதல் 14.30 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து கனம் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் வெங்கடேசன் என்பவரின் பிரேதத்தின் மீது நடத்திய பிரேத விசாரணை அறிக்கை ஆகும். அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

இவ்வழக்கில் நீங்கள் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா என்றால் பிரேத விசாரணை சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். இவ்வழக்கில் நீங்கள் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.